2005 செப்டம்பர் 23]

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதுபோல் தமிழகத்திலே இருக்கின்ற அத்தனை மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும் இந்த வாய்ப்பினை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அளிப்பார்கள், கொடுப்பார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 32, டாக்டர் திருமதி ரோகிணி, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

32—

மயில்கள் சரணாலயம்

***33763—டாக்டர் திருமதி ஆ. ரோகிணி:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி, விராலிமலை முருகன் கோயிலில் உள்ள மயில்களைப் பாதுகாக்க சரணாலயம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளத்தூர் தொகுதி, விராலிமலை முருகன் கோயிலில் மயில்களைப் பாதுகாக்க சரணாலயம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 11-20

டாக்டர் திருமதி ஆ. ரோகிணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளத்தூர் தொகுதி, விராலிமலை அருள்மிகு முருகன் திருக்கோயில் வரலாற்றுச் சிறப்புமிக்க திருத்தலம் ஆகும். திருப்புகழ் பாடிய அருணகிரிநாதரால் பாடப்பெற்ற சிறப்புமிக்க தொன்மையான திருத்தலம் ஆகும். விராலிமலையில் தேசிய பறவையாகவும், முருகனின் வாகனமாகவும் திகழ்கின்ற மயில்கள் நிறைந்து இருந்தன. ஆனால், தற்போது போதிய பாதுகாப்பின்மையால் மயில்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்து வருகிறது. விராலிமலையில் போதிய மழையின்மையாலும் மயில்கள் தங்குவதற்கு புதர்கள் குறைந்து விட்டதாலும், உணவைத் தேடி மயில்கள் நீண்டதூரம் செல்கின்றன.

புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டுமே இருந்த மயில்கள் தற்போது திருச்சி, தஞ்சை, சிவகங்கை மாவட்டங்களுக்கும் செல்கின்றன. மேலும், விளை நிலங்களில் சென்று நெல் மணிகளை உண்பதைவிட அதிக அளவு சேதப்படுத்தவும் செய்கின்றன. இதனால் விவசாயிகளும் பாதிக்கப்படுகின்றனர். மேலும், சமூக விரோதிகள் சிலரால் மயில்கள் உணவுக்காகவும், மருந்துக்காகவும் வேட்டையாடப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மயில்களைப் பாதுகாக்க விராலிமலையில் சரணாலயம் அமைக்கும் திட்டம் இல்லையென்று சொன்னார்கள். ஆனாலும், தமிழக மக்களிடம் மட்டுமல்லாமல் விலங்குகளிடத்திலும் அன்பும், அக்கறையும் கொண்டு யானைகளுக்கும் முகாம் அமைத்துப் பாதுகாத்து வரும் கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாட்சியில் தேசியப் பறவை மயில்களைப் பாதுகாக்க விராலிமலையில் சரணாலயம் அமைக்கும் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

டாக்டர் திருமதி ஆ. ரோகிணி: மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரைக்குப் பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 33, திருமதி சி.எம். சூரியகலா, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

33—

உணவுப் பொருள் வழங்குதல்

***40542—திருமதி சி.எம். சூரியகலா:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவல் துறை காவலர்களுக்கு பிரதிமாதம் வழங்கப்படும் ரேஷன் போல வனத் துறை காவலர்களுக்கும் வழங்க அரசு முன்வருமா?